**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 389/2009 |
| Deposition Of Witness for | Prosecution PW 6<br>Defense<br>Court |
| Name | **திரு. கணேசன்** |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26th day of August 2022.

நான் உன்னங்குளத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் பார்த்து வருகிறேன். காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்து **அ.சா.ஆ.4** ஆகும். போலிசார் கேட்டு கொண்டதால் போட்டு கொடுத்தேன் 10 வருடங்களுக்கு முன்பு கையெழுத்து போட்டு கொடுத்தேன். ஆஜர் எதிரியை தெரியும் உறவினர் ஆவார். வழக்கு பற்றி ஏதுவும் எனக்கு தெரியாது. போலீஸார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 01.06.2009 ஆம் தேதி காலை 10.30 மணியளவில் மூலைக்கரைப்பட்டி கா.நி உதவி ஆய்வாளர் மூலைக்கரைபட்டி கா.நி. குற்ற எண் 75/2009 இதச 294(பி), 324, 506(2) என்ற வழக்கில் செண்பகராமநல்லூர் ஏர்டெல் டவர் பக்கம் உள்ள முட்புதரில் இருந்து என் முன்னிலையில் TN 74 X 9286 என்ற பதிவெண் கொண்ட calibar 115 பைக் ஒன்றை உதவி ஆய்வாளர் உங்கள் முன்னிலையில் அத்தாட்சி மூலம் கைபற்றிய போது உடன் இருந்து சாட்சியாக கையொப்பம் செய்துவிட்டு தற்சமயம் எதிரி உறவினர் என்பதால் உண்மைக்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 389/2009 |
| Deposition Of Witness for | Prosecution PW 5<br>Defense<br>Court |
| Name | திரு. முருகன் |
| Husband Name / Father's Name | Mr.Arumugam |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26th day of August 2022.

நான் வேப்பன்குளத்தில் வசித்து வருகிறேன். டிரைவர் வேலை பார்த்து வருகிறேன். காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்து **அ.சா.ஆ. 3** ஆகும். மூலைக்கரைப்பட்டி பஸ்ஸ்டாண்டில் போலிசார் கேட்டு கொண்டதால் கையெழுத்து போட்டு கொடுத்தேன். எதற்காக போட்டு கொடுத்தேன் என தெரியாது. வழக்கு பற்றி எந்த விபரமும் தெரியாது. ஆஜர் எதிரியை தெரியாது. வழக்கு பற்றி போலீஸார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

29.04.2009 ம் தேதி காலை 06.00 மணிக்கு சம்பவ இடமான கல்லத்தி குள நீரோடையும் அதன் சுற்றுபுறங்களையும் மூலைக்கரைப்பட்டி காவல் உதவி ஆய்வாளர் உங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்த போது உடன் இருந்து சாட்சியாக கையொப்பம் செய்துவிட்டு தற்சமயம் உண்மைக்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.